பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
*19 11 2025 **WEDNESDAY 7 15 AM***
ஆகாஷவாணி - <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினின் இந்திய வருகையை ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. இந்தியாவில் தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்களுக்கு, உலகளவில் நல்ல வரவேற்பு காணப்படுவதாக, மத்திய அமைச்சர் திரு.கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

3. Al Falah குழுமத்தின் தலைவர் Jawad Ahmed Siddiqui சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தடுப்பு சட்டத்தின் கீழ், அமலாக்கத்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

4. இந்தியா – ஜெர்மனி இடையிலான ராணுவ ஒத்துழைப்புகளை வலுப்படுத்த இருநாடுகளும் முடிவு செய்துள்ளன.

5. சவுதி பட்டத்து இளவரசர் முஹமது பின் சல்மான், வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்பை சந்தித்து பேசியுள்ளார்.

>>>>><<<<<

ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினின் இந்திய வருகையை ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ரஷ்ய கடல்சார் வாரியத்தின் தலைவரும், அதிபர் திரு. புட்டினின் சிறப்பு பிரதிநிதியுமான திரு. Nikolai Patrushev புதுதில்லியில் நேற்று தம்மை சந்தித்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சந்திப்பின் போது, கடல்சார் பாதுகாப்பு, கப்பல் கட்டுதல், நீலப் பொருளாதாரம் மற்றும் திறன் மேம்பாடு உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆக்கபூர்வமான பேச்சுக்கள் நடைபெற்றதாக பிரதமர் கூறியுள்ளார்.

>>>>><<<<<

நாட்டின், பெரும் சுகாதாரப் பிரச்சினையாக உருவெடுத்துள்ள நுண்ணுயிர் எதிர்ப்பு பாதிப்புக்குத் தீர்வு காண, கூட்டு முயற்சிகளை மேற்கொள்வது அவசியம் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு.ஜெ.பி.நட்டா கூறியுள்ளார்.

புதுதில்லியில், நுண்ணுயிர் எதிர்ப்பு சக்தியை உருவாக்குவதற்கான தேசிய செயல் திட்டத்தின் 2-ம் கட்டப் பணிகளைத் தொடங்கிவைத்துப் பேசிய அவர், அறுவை சிகிச்சைகள், புற்றுநோய் சிகிச்சை மற்றும்

சிக்கலான சுகாதார சேவைகளில், இந்த பாதிப்பு, அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளதாக தெரிவித்தார்.

நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை, அளவுக்கு அதிகமாகவும், மருத்துவர்களின் ஆலோசனையின்றியும் பயன்படுத்துவது சாதாரணமாகிவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த குறைபாடு, உலகளவில் சுகாதார, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான தாக்கத்தை ஏற்படுத்துவதாக கூறிய திரு.ஜெ.பி.நட்டா, இதற்கு உரிய நேரத்தில் சிகிச்சை எடுக்காவிட்டால், பாதிப்பை அதிகரிக்கச் செய்யும் என்றும் தெரிவித்தார்.

>>>>><<<<<

இந்தியாவில் தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்களுக்கு, உலகளவில் நல்ல வரவேற்பு காணப்படுவதாக, மத்திய அமைச்சர் திரு.கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியில், கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் விற்பனை மற்றும் கண்காட்சியைத் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்த வர்த்தக கண்காட்சி, இந்திய கைவினைஞர்களின் பொருளாதார வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்து, அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

இந்திய கைவினைஞர்களின் கைத்திறன் படைப்புகள், உலக அளவில் சென்றடையச் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கைவினைப் பொருட்களைத் தயாரிப்பதற்கான மூலப்பொருட்களை எளிதில் கிடைக்கச் செய்வது முதல், தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு, வடிவமைப்பு மற்றும் சந்தைப்படுத்துதல் வரையிலான மதிப்புச் சங்கிலியை வலுப்படுத்தவும் அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக திரு. கிரிராஜ் சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

கரியமில வாயு வெளியேற்றத்தை முழுமையாக கட்டுப்படுத்த, இயற்கை எரிவாயுத் துறைக்கான முதலீட்டை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் புரி கூறியுள்ளார். டோக்கியோவில்,, ஒசாகா எரிவாயு நிறுவனத்தின்

செயல் துணைத் தலை திரு.*Kiji Takemori*-உடனான சந்திப்பு குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்திய எரிசக்தி நிறுவனங்களுக்கும், ஜப்பானின் ஒசாகா நிறுவனத்திற்கும் இடையிலான ஒத்துழைப்புகளை விரிவுபடுத்துவது குறித்து, விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

ஒசாகா எரிவாயு நிறுவனம், ஏற்கனவே இந்தியாவில் 19 நகரங்களில் எரிவாயு விநியோகப் பணியில் ஈடுபட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள திரு.ஹர்தீப் சிங் புரி, இயற்கை எரிவாயு வினியோக கட்டமைப்பை மேம்படுத்தும் பணியில் 100 சதவீத அன்னிய நேரடி முதலீடு அனுமதிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

>>>>><<<<<

சிமெண்ட் கண்டெய்னர்களுக்கான ரயில்வே சரக்குக் கட்டணம்

குறைக்கப்படுவதாக, ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இது தொடர்பான கொள்கையை வெளியிட்டுப் பேசிய அவர், சிமெண்ட் போக்குவரத்து குறித்த ரயில்வே சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாக, சிமெண்ட் உற்பத்தித் தளங்களிலிருந்து, கண்டெய்னர்களில் மொத்தமாக எடுத்துச் செல்லப்படும் சிமெண்ட்டிற்கு, ஒரு கிலோமீட்டர் தொலைவுக்கு, ஒருடன்னிற்கு 90 பைசா என்ற அளவில் கட்டணம் மாற்றியமைக்கப்படுவதாக கூறினார்.

இந்தக் கட்டணக் குறைப்பு, ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களின் சொந்த வீட்டுக் கனவை நனவாக்க உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். சிமெண்ட் மூட்டைகளை கண்டெய்னர்களில் எடுத்துச் செல்வதன் வாயிலாக, சுற்றுச்சூழல் பாதிப்பும் குறையும் என்றும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவை பின்னுக்குத் தள்ளி, உலகின் இரண்டாவது பெரிய சரக்குப் போக்குவரத்து நாடாக, இந்தியா உருவெடுத்துள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

>>>>><<<<<

பீகாரில், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய ஜனநாயக கூட்டணி சட்டப்பேரவை உறுப்பினர்கள் பாட்னாவில் இன்று கூடி, சட்டப்பேரவை குழுத் தலைவரை தேர்வு செய்யவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில், பிஜேபி, ஐக்கிய ஜனதா தளம், லோக் ஜனசக்தி, ஹிந்துஸ்தானி அவாமி மோர்ச்சா மற்றும் ராஷ்ட்ரீய லோக் மோர்ச்சா கட்சிகளைச் சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் கலந்து கொள்கின்றனர்.

அதன் பின், கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் ஆளுநர் திரு. ஆரிஃப் முஹமது கானை சந்தித்து, புதிய ஆட்சியமைக்க உரிமை கோரவுள்ளனர்.

அம்மாநில சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி 202 இடங்களில் வெற்றி பெற்று, மீண்டும் ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

>>>>><<<<<

Al Falah குழுமத்தின் தலைவர் Jawad Ahmed Siddiqui சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தடுப்பு சட்டத்தின் கீழ், அமலாக்கத்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தில்லி கார் குண்டு வெடிப்பு தொடர்பாக Al Falah குழும நிறுவனங்களில் நடத்தப்பட்ட சோதனையின் போது கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

பல்கலைக் கழக அறக்கட்டளை நிதியை, இந்த குழுமத்தைச் சேர்ந்த பல்வேறு நபர்களின் பெயருக்கு மாற்றி, முறைகேடு செய்தது தெரியவந்திருப்பதாகவும் அமலாக்கத்துறை கூறியுள்ளது.

>>>>><<<<<

இந்தியா - ஜெர்மனி இடையிலான ராணுவ ஒத்துழைப்புகளை மேம்படுத்த இரு நாடுகளும் உறுதி பூண்டுள்ளன.

பாதுகாப்புத்துறை செயலாளர் திரு. ராஜேஷ்குமார் சிங், புதுதில்லியில் ஜெர்மனி பாதுகாப்புத்துறை செயலாளர் திரு.Jens Plotner-

உடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது, இரு நாடுகளும், கூட்டாக பாதுகாப்புத் தளவாடங்களை உற்பத்தி செய்தல், பாதுகாப்புத் துறையில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதாக, பாதுகாப்பு அமைச்சக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள *TARANG SHAKTHI* எனப்படும் பன்னாட்டு விமானப்படை போர் ஒத்திகை மற்றும் *MILAN* கடற்படை ஒத்திகையில் ஜெர்மனியும் பங்கேற்கும் என்றும் பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

>>>>><<<<<

சவுதி பட்டத்து இளவரசர் முஹமது பின் சல்மான், வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்பை சந்தித்து பேசியுள்ளார்.

இந்த சந்திப்பின் போது, இருதரப்பு முதலீடுகளை அதிகரிப்பது குறித்து இரு தலைவர்களும் பேச்சு நடத்தியுள்ளதாக வெள்ளை மாளிகையின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா - சவுதி அரேபியா இடையே, செயற்கை நுண்ணறிவு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வர்த்தக நடவடிக்கைகளை அதிகரிப்பதுடன், மத்திய கிழக்கு நாடுகளில் அமைதியை நிலைநாட்டுவதற்கான முயற்சிகள் குறித்து இந்த சந்திப்பின் போது ஆலோசிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

>>>>><<<<<

விஸ்கோஸ் எனப்படும் செயற்கை நூல் இழைகளுக்கான தரக் கட்டுப்பாடு உத்தரவு கட்டாயம் என்ற உத்தரவை, மத்திய அரசு ரத்து செய்துள்ளது.

இது தொடர்பாக, மத்திய ஜவுளி அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அரசின் இந்த நடவடிக்கை, தரமான மூலப் பொருட்கள், தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வதோடு, உலகளாவிய போட்டித் தன்மையை அதிகரிக்கச் செய்து, தொழில் சார்ந்த வளர்ச்சிக்கு உதவிகரமாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜவுளி உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், தொழில் தொடங்குவதற்கான நடைமுறைகள் எளிமைப்படுத்தப்படும் என்ற அரசின் உறுதிப்பாட்டிற்கு சான்றாக, அரசின் இந்த நடவடிக்கை அமையும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும், ஜவுளித்துறை சார்ந்த ஏற்றுமதியை நூறு பில்லியன் டாலராக உயர்த்தவும்,உள்நாட்டுப் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான இலக்கை எட்டவும் இது உதவிகரமாக இருக்கும் என்றும் ஜவுளி அமைச்சம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

வளர்ந்து வரும் இளம் வீரர்களுக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா-ஏ அணி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

தோஹாவில் நேற்று நடைபெற்ற கடைசி குழுப் போட்டியில், இந்தியா-ஏ அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் ஓமன் அணியை வென்றது.

*முதலில் பேட் செய்த ஓமன் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 135 ரன் எடுத்தது.*

*பின்னர் களமிறங்கிய இந்தியா-ஏ அணி 17 புள்ளி ஐந்து ஓவரிலேயே 4 விக்கெட்டுகளை மட்டும் இழந்து, 138 ரன் எடுத்து வெற்றிபெற்றது.*

*>>>>><<<<<*

*தமிழகத்தில் வரும் 28ஆம் தேதி தொடங்கவுள்ள ஆடவர் உலக கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியில் பங்கேற்கும் பங்களாதேஷ் அணியைச் சேர்ந்த வீரர்கள் நேற்று சென்னை வந்தனர்.*

***>>>>>end<<<<<***